கல்யாண முகூர்த்தப் புடவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 26 வியாழக்கிழமை (10 – 03 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 103

## சீனி நிறுவையில் வெட்டு! சங்கக் கடையில் மோசடி!!

யாழ்ப்பாணம், மார்ச் 10

மக்களுக்கு சீனி விநியோகம் செய்த ப.நோ.கூ. சங்க கிளை ஒன்று மோசடியில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டு கிலோ சீனியில் 40 கிராம் சீனி குறைத்து நிறுத்து வழங்கியமை தெரியவந்தது.

யாழ். செயலக நிறுத்தல் அளவைகள் பரிசோதகர் பகுதிக்கு கிடைத்த புகாரை அடுத்து திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டு இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டது.

அரியாலைப் பகுதியிலுள்ள ப.நோ.கூ. சங்க கிளை ஒன்றிலேயே இந்த மோசடி இடம்பெற்றுள்ளது.

இதேவேளை இந்தச் சங்கக் கிளையின் மண்ணெண்ணெய் விநியோகத்திற்கென வைக்கப்பட்டிருந்த ஒரு லீற்றருக்குரிய கொள்கலனும் 30 மில்லி லீற்றர் குறைவாகக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-162)

தென் மாகாண சபைத் தேர்தலில்

## குறுக்கு வழிமூலம் ஐ.தே.க. வென்றால் நாடு சீரழியும்!

### தேர்தல் ஆணையாளருக்கு சு.க. எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 10

எதிர்வரும் தென்மாகாண சபைத் தேர்தலில் சட்ட விரோதச் செயல்கள் மூலம் குறுக்கு வழியில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற முயற்சிக்குமாயின் நீண்ட கால சட்ட மறுப்பு மற்றும் அரச விரோதச் செயல்கள் உருவாகி நாடு சீரழியும் வாய்ப்பு உண்டு என்று தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளரும் கண்டி மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பியுமான டி.எம். ஜயரத்தினா தேர்தல் ஆணையாளருக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் முன்கண்ட

(5ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தாக்கு; சிப்பாய் உயிரிழப்பு

### ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 10

திருகோணமலை கோமரங்கடவல இராணுவ முகாமில் இருந்து அப்புரவாகும் பணியில் ஈடுபட வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இத்தாக்குதல் நடைபெற்ற வேளை கோமரங்கடவல முகாமில் இருந்தும், மண்குளம் பாலத்தடி முகாமில் இருந்தும் "பவளி" கவச வாகனங்கள் சகிதம் முன்னேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

(5 ஆம் பக்கம் பார்க்க)

# இணைப்புப் பற்றிய சர்வசன வாக்கெடுப்பை கிழக்கில் நடத்த அரசாங்கம் தயாராகி வருகிறது!

## கொழும்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 10

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாக இணைப்பதா என்பது பற்றிய சர்வசன வாக்கெடுப்பை கிழக்கு மாகாணத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாகத் தெரிகிறது.

கொழும்பில் உள்ள பி.பி.ஸி. செய்தியாளர் சியாகோ நாலைஸ மேற்கோள் காட்டி பி.பி.ஸி. இதனை அறிவித்திருக்கிறது.

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தில் உள்ள ஏற்பாடுகளின் படியும் — மாகாணசபைகள் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சட்டப் பிரிவுகளின்படியும் — வடமாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாக இணைப்பதற்கான

(5ஆம் பக்கம் பார்க்க)

## பலியான மற்றைய மீனவரின் சடலமும் நேற்று மீட்பு

வடமராட்சி, மார்ச் 10

கடற்படையினரின் தாக்குதலுக்குப் பலியான மீனவர்களில் மற்றொருவரின் சடலமும் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடலில் கடந்த திங்கட்கிழமை கடற்படையினரின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்குப் பலியான மூன்று மீனவர்களில் இருவரது சடலங்கள் ஏற்கனவே மீட்கப்பட்டன என்பது தெரிந்ததே.

மூன்றாவது மீனவரான உடுத்துறையைச் சேர்ந்த — தம்பி என அழைக்கப்படும் — என். விஜயன் என்பவரின் சடலமே நேற்றுக்காலை குடத்தனைக் கடலில் கரை ஒதுங்கியது. (-173-117)

## திருமலை மூதூர் பகுதியில் இரு போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 10

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் முட்டுச்சேனைப் பாலத்தடி பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் சென்று கொண்டிருந்தபோது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் விடுதலைப் புலி போராளிகள் இருவர் வீரச்சாவு அடைந்தனர்.

கடந்த செவ்வாய் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வீரவேங்கை எழில்செல்வன் அல்லது உமாகாந்த் (கோபாலபிள்ளை கனகலிங்கம் — மூதூர்) இரண்டாம் லெப். சந்தரேஸ்வரன் அல்லது முரளி (இராசதுரை மகேந்திரன் — மட்டக்களப்பு) ஆகியோரே வீரச்சாவு அடைந்தனர். (ஓ-த)

## வலயகல்வி அலுவலகங்களுக்கு அதிகாரங்கள் மிகக் குறைவு!

### ஒரு பகுதி மாகாணசபைக்கு; எஞ்சியவை கோட்டங்களுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்குப் பதிலாக குடாநாட்டின் கல்வி நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இரண்டு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் —

பிரதேசக் கல்விப் பணிமனைக்கு இருந்த அதிகாரங்கள் பல வலயப் பணிமனைக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளை நிர்வகிப்பது தொடர்பாக யாழ். பிரதேசக் கல்விப் பணிமனை பிரயோகித்து வந்த அதிகாரங்கள் இப்போது பிரதேச செயலகப் பிரிவுகள் ரீதியாக அமைக்கப்பட்டிருக்கும் கோட்டக் கல்விப் பணிமனை (பிரதேசக் கல்விப் பணிமனை) களுக்கு வழங்கப்பட்டு விட்டன.

அதேவேளை மற்றைய பல அதிகாரங்கள் யாழ். பிரதேச கல்விப் பணிமனையிடமிருந்து வலய கல்விப் பணிமனைக்கு வழங்கப்படாமல் வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டு விட்டதாக அறியவருகிறது.

வலயப் பணிமனைகளைப் பொறுத்தவரை அவற்றுக்குப் பெரும்பாலும் கல்வியை ஆற்றுப்படுத்தும் அதிகாரம் மட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 10

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஓ-3)

முச்சந்தி முரளி



நாடு சீரழியிறது பற்றி என்ன கவலை.....! எலக்ஷனிலை வெண்டால் சரி.....!!

## ஆயுதக் களஞ்சியம் அமைக்க சீன நிறுவனத்துடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 10

ஸ்ரீலங்காவில் இராணுவ ஆயுதக் களஞ்சியம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுக்கும் சீன ஆயுத நிறுவனம் ஒன்றுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவிலுள்ள பிரபல இராணுவ ஆயுதத் தளபாட உற்பத்தி நிறுவனமான "நொரின்கோ" நிறுவனத்திற்கும் ஸ்ரீலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகளுக்கும் இடையில் இப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுதம் விற்பனை செய்யும் முக்கிய நிறுவனமாக "நொரின்கோ" விளங்குகின்றது.

ஸ்ரீலங்காவிற்குப் பெருமளவு இராணுவத் தளபாடங்களை இந் நிறுவனமே விற்பனை செய்து வருகின்றது.

தொடர்ந்து இந்த நிறுவனத்திடம் இருந்து தமக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்கள் அனைத்தையும் கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

"நொரின்கோ" நிறுவனமும் இது தொடர்பாகத் தனது விருப்பத்தை அரசிற்குத் தெரிவித்துள்ளது என்று கூறப்படுகிறது.

இதேவேளை —

இந் நிறுவனத்திடம் இருந்து ஒரே வகையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது இராணுவத்தினர் மத்தியிலும் உயர் இராணுவ அதிகாரிகள் மத்தியிலும் அதிருப்தி உணர்வை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-த)

## மாவுடன் ஹெந்தல கப்பல் நாளை இங்கு வந்து சேரும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

திருகோணமலை பிரீமா ஆலையில் ஒருதொகுதி மாவை ஏற்றிக் கொண்டு 'ஹெந்தல' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரவிருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார்.

தாம் விடுத்த கோரிக்கையை அடுத்து, அக்கப்பல் திருகோணமலைக்குச் சென்று மாவை ஏற்றி வருவதாகவும் —

முற்பணம் கோரப்படாமல் மா ஏற்றி வரப்படுவதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை — கொழும்பில் இருந்து நேற்று வடக்கு நோக்கி புறப்படவிருந்த 'ருகுணு' கப்பல் நாளை மறுதினம் பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-3)

## நரோமா பயணிகள் சேவை திட்டமிட்டபடி நடக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

'நரோமா' கப்பல் சேவை திட்டமிட்டபடி அடுத்வாரம் நடைபெறும் என அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்றுத் தெரிவித்தார்.

ஹெந்தல கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேர இருப்பதால், திட்டமிட்டபடி நரோமா சேவையை நடத்த ஏற்பாடாகியுள்ளது, என்றும் அரச அதிபர் சொன்னார்.

காங்கேசன் துறைக்கு வந்து சேரும் நரோமாவில் இருந்து பயணிகளை பருத்தித் துறைக்கு ஏற்றி வர இணைப்பு கப்பல் இல்லாத காரணத்தினால், நரோமா சேவை திட்டமிட்டபடி அடுத்த வாரம் நடைபெறுமா என்பது கேள்விக்குறியாக இருந்து வந்தது தெரிந்ததே.

ஹெந்தல கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேர இருப்பதால், அது இணைப்பு கப்பல் சேவையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனால் ஏற்கனவே செயலகத்தில் பதிவு செய்தவர்களை நாளை சனிக்கிழமை செயலகத்தில் சமுகமளித்து தமது பயணத்தை உறுதிப்படுத்தி கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

வவுனியா கூ. மொ.வியில் இருந்து

## வடக்கிற்கு அடுத்தவாரம்முதல் பொருள்விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 10

வவுனியா கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் இருந்து வடபகுதிக்கான முதற்கட்ட பொருள் விநியோகம் அடுத்த வாரம் முதல்— 16 ஆம், 17 ஆம் திகதிகளில்— ஆரம்பிக்கப்பட உள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களுக்கான பொருள்களே முதற்கட்டமாக விநியோகிக்கப்பட உள்ளன.

தொடர்ந்து கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் தமது கிரமமான விநியோகத்தை ஆரம்பிக்க உள்ளது என்றும்—

பாதுகாப்பு அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட சகல பொருள்களும் இந்த விற்பனை நிலைய களஞ்சியத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும்—

கூட்டுறவு மற்றும் தனியார் துறையினர் மூலம் இந்த பொருள் விநியோகம் வடக்கின் சகல மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும்— கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருந்தது. (ஓ-9)

## அரியாலையில் ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 10

அரியாலை கிழக்கு கடற்பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி நேற்றுக் காலை 6.45 மணியளவில் ஹெலியில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

தெய்வாதீனமாக மீனவர்கள் எவரும் காயமடையவில்லை. அவர்கள் தொழிலை விட்டு விட்டு கரையை அடைந்தனர். (ஓ-15)

## நாளை வர்த்தக விடுமுறை

யாழ்ப்பாணம், மார்ச் 10

இன்று மகாசிவராத்திரி தினமாகும். இதனை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை வர்த்தக விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-77)

## ஹெலி வீசிய பிரசுரங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 10

குடாநாட்டில் நேற்றுமுன்தினம் பல இடங்களில் ஹெலி துண்டுப் பிரசுரங்களை வீசியது. (ஓ-17-117)

## கொடி வாரம் இன்று ஆரம்பம்

சைவச் சிறுவர் இல்லத்தின் கொடி வாரம் இன்று ஆரம்பமாகிறது. இம்மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை வரை கொடிகள் யாழ்ப்பாணக் குடாநாடு எங்கும் விற்கப்படும்.

கொடி வார ஆரம்பவிழா இன்று காலை 9 மணிக்கு, சைவச் சிறுவர் இல்லத்தில், இந்து சமயப் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா தலைமையில் நடைபெறும்.

(ஆரம்பவிழா பற்றிய விபரத்தை 8 ஆம் பக்கத்தில் உள்ள சிறப்பு மலரில் பார்க்கலாம்) (அ-117)

## மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்த யாழ்ப்பாணத்தில் நிறுவனம் உருவாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

தற்போதைய அடிப்படை மனிதஉரிமை மீறல்களை உலகுக்கு எடுத்துக்காட்டியும், கண்டித்தும், நீதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கென யாழ். மறை மாவட்டத்தில் ஒரு நிறுவனம் அமைக்கப்பட உள்ளது.

இதற்கான தீர்மானம் மேய்ப்புப் பணி மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகளின் போது நேற்று ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு யாழ் மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாயின. [illegible] யாழ். மறை மாவட்ட குருக்கள் அனைவரும், 253 பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அன்பு, மன்னிப்பு, இரக்கம், சகோதரத்துவம், சமாதானம் ஆகியவற்றை சகல இடங்களிலும் எல்லா நேரங்களிலும் நிலைநாட்டுவது கத்தோலிக்க திருச்சபையின் பணியாகும்— நீதிக்காக, சமாதானத்துக்காக, உரிமைக்காக கத்தோலிக்க திருச்சபை குரல் கொடுக்க வேண்டிய பெரும் கடமை அதற்கு உண்டு—

ஆகிய கருத்துக்கள் இந்த இரண்டாம் நாள் நிகழ்வுகளில் வற்புறுத்தப்பட்டன.

அத்தோடு கடந்த காலத்தை விட திருச்சபை இன்றைய சூழ்நிலையால் இன்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்

# கைதடி சைவச் சிறுவர் இல்லக் கொடி வார சிறப்பிதழ்

10 - 3 - 1994 தொடக்கம் 16 - 3 - 1994 வரை

## தர்ம உள்ளம் படைத்தோரே வாரி வழங்குங்கள்

அன்புடைய தருமசீலர்களே!

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையால் கைதடி சைவச்சிறுவர் இல்ல வளர்ச்சிக்காக மார்ச் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடாத்தப்படவிருக்கும் கொடி வாரம் சம்பந்தமாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைவதோடு, அவர்களது முயற்சி வெற்றி பெற எல்லாம் வல்ல எம்பிரானைப் பிரார்த்திக்கின்றேன். தமது தாய் தந்தையரை இழந்தும், அநாதரவாகவும், இளமையில் வறுமையில் சிக்குண்டும், தத்தளிக்கும் இந்தக் குழந்தைகளுக்குப் புகலிடமாகக் கைதடி சைவச் சிறுவர் இல்லம் விளங்குகின்றது. இந்தக் குழந்தைகளின் நன்மை கருதி நடத்தப்படுகின்ற இந்தக் கொடி விற்பனைக்குத் தரும உள்ளம் படைத்தோர் வாரி வழங்குவார் என்பது உறுதி. ஏழைகள் நலன் பேணி எமது தர்மத்தை மேலும் வளர்ப்போமாக.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம், 8 - 3 - 1994.

## சைவசமய நிலையமாகப் பொலிக

யாழ்ப்பாணம் கைதடி சைவச் சிறார் இல்லம் இந்து சமயப் பேரவையினரின் மகாமைத்துவத்தின் கீழ் மிகவும் சிறப்புடன் நடைபெறுகின்றதென்பதை அறிந்து மகிழ்ச்சி கொள்கின்றேன். மேற்படி இல்லமும் இந்துசமயப் பேரவையும் மேன்மேலும் சிறந்து சைவசமயிகளாகிய எமக்கு சைவசமய கேந்திர நிலையமாக பொலிய வேண்டும் என்று எல்லாம் வல்ல சிவபிரானை வாழ்த்தி வணங்குவோமாக

சைவப் பெரியார் சித்தாந்தவித்தகர்,
திரு. மு. ஞானப்பிரகாசம்
பரமேஸ்வரா அறங்காவலர் சபைத்தலைவர்,
திருக்கேதீஸ்வரம் திருப்பணிச்சபைத் தலைவர்.

## கொடிவாரத்துக்கு ஆதரவு நல்குவீர்

கைதடி சைவச் சிறார் இல்லப் பிள்ளைகளின் நலன் பேணவும், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவும், இந்து சமயப் பேரவையினரால் யாழ். மாவட்டமெங்கும் கொடிவாரம் நடத்தப்படுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஏழைகள், அனாதைகள், ஆதரவற்றவர்களை அரவணைத்து அவர்களுக்கு உதவுவது இறைவனுக்கு செய்யும் அர்ச்சனையாகும். அத்தகைய உயரிய நோக்கோடு நடைபெறும் இக்கொடிவாரத்திற்கு எல்லா மக்களையும் அன்புடன் ஆதரவு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கா. மாணிக்கவாசகர்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்

## நிதி கொடுத்துதவும் பொன்னாள்

சீர்மிகு ஈழத் திருமணி நாட்டில்
ஏர்வளம் மிக்க யாழ்ப் பெயர்ப் பதியில்
நீர்வளம் நிலவளம் நிலை பெயர்த்திட்டு
காரிருள் படர்ந்து கலங்கு மிவ் வேளையில்
இந்து சேகரன் ஏழை பங்காளன்
சுந்தரன் தூதாய்ச் சென்ற எம்பெருமான்
மூத்து பேரருளால் தந்த பேரவையாம்
இந்து சமயப் பேரவையாற்றும்
தொண்டுகள் பற்பல சொல்லிலுமடங்கா
கைதடி ஏழைச் சைவச் சிறாரிலம்
செய்பணி சிறந்து ஏழைச்சிறார் நலம் பெருக
ஈடிலாத் தருமத்தியல்பு சால் கொடித்தினம்
மாசிலா மாசி மார்ச் பத்தாந் திகதி
பொன்னாள் நன்னாள் அறம்வளர் இந்நாள்
தந்தையையிழந்து தாயையிழந்து
தந்தம் வாழ் பதியையும் தமரையுமிழந்து
தாவிப்படரக் கொழும்பில்லாது
மேவித் துடிக்கும் தனிக்கொடியான
அனாதைக் குழந்தைகளுக்கு ஆதாவளித்து
நிதி கொடுத்துதவும் நிகரிலாப் பொன்னாள்
நிலையிலா நிதியை நிலைபெறச் செய்து
நிதி சேகரிப்புக்கு மனமுவந்துதவுவீர்
ஆலயங்களின் அறம்வளர் சபைகளும்
சால நற்சமூகப் பணிபுரி சபைகளும்
ஏலுமாறுதவுக இன்றே உதவுக
ஐந்து பத்தென்றும் அளவினராகி
நைந்துநைந்துருகி நலியும் குழந்தைகள்
சிந்தை மகிழ கைதடி சைவசிறாரிலம் வளர
அன்பெனும் சமயம் அறிந்து பெற்ற யாம்
துன்பம் துடைப்போம் சிறுவர் துயர் போக்குவோம்
என்ற மனவுறுதியை இன்றே கொள்வோம்
கைதடி சைவ இல்லச் சிறார் தின
நினைவுக் கொடியிதுக்குதவி குழந்தைகள்
நனவினை வளர்க்கும் நற்பணிக் குதவுவோம்
கொடி நிதி வளர்த்து இந்து சமயப் பேரவை
கொள்கைகள் வளர்ப்போம்
பல்லாண்டிடலும் பதக் கடந்தருள்புரி
எல்லாம் வல்ல இறையடி வணங்குவோம்.

- சைவப் புலவர் வித்துவான்
ப. சச்சிதானந்தசிவம் -

## இந்து தர்மப் பணிகளுக்கு அனைவரும் இயன்றளவு உதவி புரிவோம்!

கைதடி சைவச் சிறுவர் இல்ல நிதிக்காக, இந்துசமயப் பேரவை 10-03-1994 தொடக்கம் 16-03-1994 வரை நடத்தும் கொடி வாரம் பூரண வெற்றி பெற எல்லாம் வல்ல எம்பிரானின் திருவருள் கிடைப்பதாக.

இந்துசமயப் பேரவை சமய அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வருவது வரவேற்கத்தக்கதாகும்.

ஏழைகளைப் பேணுவதும் எமது கலை கலாசாரத்தைப் போற்றி வளர்ப்பதும் திக்கற்றவர்களுக்குப் புகலிடம் அளிப்பதும் எமது தர்மத்தின் அடிப்படை அம்சங்களாகும்.

இதனால் தான் எமது தேவஸ்தானங்களில் பண்டைக் காலம் தொட்டு இப் பணிகள் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் நமது தேவஸ்தானங்களில் இப்பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

தவிரவும் இப்பணிகளை மேற்கொள்ளும் அமைப்புகளுக்கு தேவஸ்தானங்களும் மக்களும் இயன்றளவு உதவி இந்து தர்மம் நிலைக்கத் துணை புரிய வேண்டும்.

இக்கொடி வாரத்தில் இந்தப் புனித கடமையை எல்லாத் தமிழ் மக்களும் நிறைவேற்றுவர் என்பதில் ஐயமில்லை.

இந்து சமயப் பேரவையின் தர்மப் பணிகள் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

ஆ. மகாலிங்கம்,
தலைவர்,
திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர்,
ஞாபகார்த்த சபை

உ

### இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்
### கைதடி சைவச் சிறுவர் இல்லம் கொடிவாரம் 10-16-3-94
### ஆரம்ப விழா

இடம்: கைதடி சைவச் சிறுவர் இல்லம்

காலம்: 10 - 03 - 1994 மு. ப 9-00 மணி

தலைவர்: ஆத்மஜோதி திரு நா. முத்தையா அவர்கள்

வரவேற்புரை: திரு. சி. சக்திகிரீவன் (செயலாளர், இ. ச. பே. யாழ்.)

ஆசி உரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை. ஆதீன குருமகா சந்நிதானம்)

கொடி வாரத்தை ஆரம்பித்து முதற் கொடி வழங்கல்: திரு. கா. மாணிக்கவாசகர் அவர்கள், (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

முதற் கொடி பெறுபவர்: திரு. த. இ. பாலசுந்தரம் அவர்கள், (தலைவர், கோப்பாய் லயன்ஸ் கழகம்)

வாழ்த்துரைகள்:
(1) செல்வி தி. பெரியதம்பி அவர்கள் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ் தெற்கு)
(2) திரு. பு சுந்தரம்பிள்ளை அவர்கள், (பிரதேசச் செயலாளர், தென்மராட்சி)
(3) திரு. ஆ. மகாலிங்கம், (பிரதேசச் செயலாளர், வலி தெற்கு)
(4) குலபதி திரு ஆறுமுகம் கந்தையா J.P. அவர்கள், (ஸ்தாபகர். கைதடி சைவச் சிறுவர் இல்லம்)
(5) திரு. சி. நாகராசா சட்டத்தரணி, (பொருளாளர், இந்து சமயப் பேரவை யாழ்.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்து சமயப் பேரவை,
யாழ்ப்பாணம்,

08-03 1994

## கைதடி சைவச் சிறுவர் இல்லக் கொடி வாரம்

பங்குனி என்றதும் பங்குனித் திங்களும் பங்குனி உத்தரமும் நினைவுக்கு வருவது போல மார்ச் 10 ஆம் திகதி என்றால் கைதடிச் சைவச் சிறுவர் இல்ல நினைவு சைவ மக்கள் மத்தியில் நினைவுக்கு வருதல் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

தாய் இல்லாத குழந்தைகள், தந்தை இல்லாத குழந்தைகள், தாயும் தந்தையும் இல்லாத குழந்தைகள், தாய் தந்தையரால் கைவிடப்பட்ட குழந்தைகள் என நான்கு விதக் குறைபாடுடைய குழந்தைகள் எமது இல்லத்தில் வாழ்கின்றனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் அரச உதவி எதுவும் இல்லாமல் பொது மக்களுடைய நல்லெண்ணத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். இக் குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து எதிர்காலத்தில் இந்நாட்டின் நற்பிரசைகளாக்க வேண்டும் என்று பல பெரியோர் அல்லும் பகலும் ஈடுபட்டு உழைக்கின்றனர். பலருடைய ஒத்துழைப்பே சைவச் சிறுவர் இல்லத்தின் உயிர் நாடி என்று கூறலாம்.

தற்போது பலருடைய பிறந்த தினங்களும் ஆண்டுத்திவசம், அந்தியேட்டி முதலியனவும் பெருங்கோயில் விழாக்களின் நினைவுகளும் திருமண நாளும் திருமண நினைவு நாட்களும் இல்லத்திலேயே கொண்டாடப்படுதல் மூலம் குழந்தைகளுடைய மனோ நிலைகளும் மகிழ்ச்சி பெறுகின்றன.

ஒரு சிலர் நிரந்தர வைப்புப் பணமாக பதினையாயிரம் ரூபா வங்கியில் இடுதல் மூலம் அதன் வருடாந்த வட்டியைக் கொண்டு அவர்கள் குறிப்பிடும் நாளில் அன்னதான வைபவம் நடைபெற்று வருகின்றது. தற்போதைய சூழ்நிலையில் ஏழைகளுக்கும், அநாதரவானோர்க்கும், அகதிகளுக்கும் உதவ வேண்டியதும் எமது பொறுப்பாகும்.

ஆண்டவன் ஏழைகளின் குடிசையிலேயே வாழ்கின்றான் என்பது பெரியோருடைய கருத்தாகும். மேற்படி கொடிவாரத்திற்கு வாரி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நா. முத்தையா, தலைவர்.
சி. நாகராசா, பொருளாளர்,
சி. சக்திகிரீவன், கௌரவ செயலாளர்.

இந்து சமய பேரவை,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம். 08 - 03 - 1994

## தர்ம கைங்கரியத்துக்கு அள்ளிக் கொடுங்கள்

"சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு" இவ்வாறு திருவள்ளுவரும் அறத்தின்மிக்க உறுதி வேறில்லையெனவும், அறஞ்செய்வதால் பெறும் செல்வங்களையும் கூறியுள்ளார்.

செல்வமானது,

"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அது விளிந்தற்று" என்று கூத்து அரங்கில் காண்போர் கூட்டம் வந்ததுபோலவும், அக்கூத்து முடிந்ததும் அக்கூட்டம் போனதுபோல், செல்வமும் வந்து போகும். எனவே அச்செல்வத்தினை

"கொள்ளும் கொடுங்கூற்றங் கொல்லான் குறுகுதன்முன் உள்ளங் கனிந்தறஞ் செய்துய்மவே - வெள்ளம் வருவதற்கு முன்னர் அணைபோலி வையார் பெருகுதற்கண் என்செய்வார் பேசு" என்ற நன்னெறி வாயிலாக உயிரைக் கொண்டு போக யமன் அணுகுவதற்கு முன்னதாகவே தருமங்களைச் செய்து தப்புவாயாக என அறநூல்கள் அறியத் தருகின்றன.

இந்துசமயப் பேரவை தர்மகாரியங்களைச் செய்வதற்கான வழிவகைகளைச் செய்துள்ளது. அத்தர்ம கைங்கரியங்களால் இந்த உலகை "நற்றவ வானிலும் நனி சிறந்ததுவே" என அறமைக்க அல்லும் பகலும் ஆவன செய்கிறது. அந்த வகையில் தான் "கொடித்தினமும்" இடம் பெறுகிறது. அனைவரும் இத்தர்ம கைங்கரியத்திற்கு தாராளமாக உபகரித்து சகல செல்வங்களுக்கும் ஆளாகுவீர்களாக.

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள்
மாவை ஆதீனகர்த்தா

## நன்றே செய்வோம் இன்றே செய்வோம்

"நடமாடும் கோயில் நம்பர்க்கொன்றீயில்
படமாடும் கோயில் பரமர்க்கங்காமே"

என்பது திருமந்திரம். ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்களின் நலனை முன்னிட்டு இயங்கும் நிறுவனங்களில் ஒன்றாக விளங்குவது கைதடி சைவச் சிறுவர் இல்லமாகும். இத்தகைய புண்ணியச் செயல்களை ஊக்குவிக்க வேண்டிய கடமை இந்நாட்டு நலன் விரும்பிகள் அனைவருக்கும் உண்டு. 10-03-94 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையால் நடத்தப்பட இருக்கும் கொடி வாரம் அனைவரதும் பங்களிப்புக்கும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகிறது எனலாம். எனவே "நன்றே செய்வோம் அதனை இன்றே செய்வோம்!" என்ற குறிக்கோளை நெஞ்சில் இருத்தி ஆவன செய்வோமாக.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
தலைவர்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை.

## மனமுவந்து நன்கொடை வழங்குங்கள்

இந்து சமயப் பேரவை நடத்தி வரும் கைதடியிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்தின் கொடி வார விழா மலருக்கு எனது வாழ்த்துரையை வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கொடிவாரத்தின் போது நாம் மனமுவந்து வழங்கும் நன்கொடைகள் யாவும் ஒன்று சேர்ந்து பெரு நிதியாகி இறைவனையே தாயாகவும் தந்தையாகவும் கொண்டு மேற்படி இல்லத்தில் வாழும் சிறுவர்களுக்கு பெரும் ஆதாரமாக விளங்கப் போகின்றது என்பதை நாம் எல்லோரும் உணர்தல் வேண்டும்.

எம்முடைய செல்வத்தின் ஒரு சிறு பகுதியை - ஒரு துளியை - வழங்கி நிதியின் பெருக்கத்திற்கு உதவ வேண்டும் என ஆசிரிய மாணவ சமூகத்தை நான் வேண்டிக் கொள்கின்றேன். எங்களிடம் உள்ளவற்றை நாம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது எச்செல்வமும் குறைவதில்லை. தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்ற சிந்தனை உள்ளவரிடையே அது பெருகிக் கொண்டே இருக்கும்.

இல்லக் குழந்தைகளின் வாழ்வு மலர இறைபருளை வேண்டி நிற்கின்றேன்.

செல்வி தி. பெரியதம்பி
கல்விப் பணிப்பாளர் - யாழ். தெற்கு வலயம்.

1994 - 03 - 08.

## இந்துசமய, சமூக அபிவிருத்தி நிதியம்

இந்து சமய வளர்ச்சிப் பணிகளையும், ஏழைகள், ஆதரவற்றோர் மற்றும் அகதிகளுக்கு உதவும்பணிகளையும் மேற்கொள்வதற்காக இந்து சமயப் பேரவை மேற்கூறிய தனியான நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதன் தற்போதைய பணிப்பாளர்களாக பேரவைத் தலைவர், செயலாளர், பொருளாளர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. க. கனகராசா, கலாநிதி சி. க. சிற்றம்பலம், திரு. ஈ. சரவணபவன் ஆகியோர் பணிபுரிகின்றனர். இந்நிதியத்திற்கு உதவ விரும்பும் அன்பர்கள் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கிக் கணக்கு இலக்கம் 13219க்கு அல்லது பொருளாளருக்கு தங்கள் பங்களிப்பை அனுப்பும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்து சமயப் பேரவை,
யாழ்ப்பாணம்.

09-03-1994


இம் மலர் வெளிவர உதவியோர

குறோமோ அகிறோ சேல்ஸ் சென்ரர்
கே. கே. எஸ் றோட், சுன்னாகம்

பேரம்பலம் அன் சன்ஸ்
கே. கே எஸ் றோட், சுன்னாகம்

அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர் வெளியீட்டாளர்
சிவா பிறின்ரேஸ்
கண்டி வீதி, கைதடி.

துர்க்கா புத்தகசாலை
சந்தரோடை றோட், சுன்னாகம்.

தனலக்குமி புத்தகசாலை
கே. கே. எஸ் றோட், சுன்னாகம்.

சுந்தரம் காப்வெயர்ஸ்
கே. கே. எஸ். றோட், சுன்னாகம்.

வேலமுகன் காட்வெயர்ஸ்
கே. கே. எஸ். றோட், சுன்னாகம்.

திருமகள் அழுத்தகம்
கே. கே. எஸ். றோட், சுன்னாகம்

கரன் ரெக்ஸ் ரெயில்ஸ்
பலாலி வீதி, திருநெல்வேலி.

சக்தி பார்மஸி
சுன்னாகம்.

வேல் மோட்டோஸ்
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கூட்டுறவுக் கோட்டத்திற்கு

# ரூபா 200 லட்சம் பெறுமதிமிக்க பொருள்கள் கப்பலில் வருகின்றன

### சைக்கிள்கள், ரயர் - ரியூப்களும் எடுத்து வரப்படுகின்றன

யாழ்ப்பாணம், மார்ச். 10 வாதுவ கப்பலில் வலிகாமம் கூட்டுறவுக் கோட்டத்திற்கு 200லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எடுத்துவரப்படுகின்றன.

இதில் பாமா வகைகள், சவர்க்கார வகைகள், சைக்கிள்கள் அவற்றுக்கான ரயர்-ரியூப்கள், சக்கரை, மல்லி போன்ற பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவுக் கோட்டரீதியாக சங்கங்கள் ஒன்றிணைந்து கொழும்பில் நேரடியாக பொருள்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையின் முதல் கட்ட பொருள்களே வாதுவ கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

வலிகாமம் கூட்டுறவுக் கோட்டத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், அச்சுவேலி, நீர்வேலி சுன்னாகம், மானிப்பாய், பண்டத்தரிப்பு, சங்கானை, தெல்லிப்பளை, அளவெட்டி மல்லாகம் போன்ற ப. நோ. கூ. சங்கங்கள் ஒன்றிணைந்து இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-162)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 10 கரவெட்டி, கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியில் மாணவர்களுக்கான ஆக்க ஓவிய, புகைப்படக் கண்காட்சி இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

இன்று வியாழன் காலை 9 மணிக்கு கண்காட்சியின் ஆரம்ப நிகழ்ச்சி இடம் பெறும்.

கரவெட்டி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவராசா பிரதம விருந்தினராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் (கரவெட்டி) திரு. வி. அருளானந்தம், சித்திர உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. வி. சிவசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஒ)

## பிரபல கடத்தல் புள்ளியுடன் அரசியல்வாதிகள் தொடர்பு!

### பொலீஸ் விசாரணையில் அம்பலம்

கொழும்பு, மார்ச் 10

அண்மையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பெரும் புள்ளியுடன் கூட்டாக பொலிஸ் அதிகாரிகள் சிலரும் அரசியல் வாதிகள் சிலரும் இணைந்து செயற்பட்ட விஷயம் பொலீஸ் விசாரணையில் வெளியாகியிருக்கிறது.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள அச்சந்தேக நபரை விடுவிக்கும் முயற்சியில் ராஜாங்க அமைச்சர் ஒருவர் ஈடுபட்டிருந்தார் என்றும் —

அம்முயற்சி பலனளிக்காமல் தோல்வியில் முடிந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அக்கடத்தல்காரருடன் குறிப்பிட்ட ராஜாங்க அமைச்சர் மட்டும் தொடர்பு கொண்டிருக்கவில்லை. வேறு சில அரசியல்வாதிகளும் தொடர்பு வைத்திருந்தனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடத்தல்காரரின் மாளிகாவத்தை வீட்டில் இருந்து 5 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைவஸ்தை, போதைவஸ்துப் பொலீஸார் கைப்பற்றினார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட கடத்தல்காரர் கைது செய்யப்பட்ட பின்னர் சுகயீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவரை அரசியல்வாதி ஒருவர் தமது மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் சென்று பார்வையிட்டார் என்றும் —

அப்போது அந்த நபர் பொலீஸ் காவலில் இருந்து தப்பியோட முயற்சித்ததாகவும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலீஸ் சப் - இன்ஸ்பெக்டர் ஒருவர் தமது துப்பாக்கியை இக்கடத்தல் காரருக்கு விற்றார் என்பதும் பொலீஸ் விசாரணையில் வெளியானது. (ஒ-எ)

## வவுனியாவில் பயணிகள் மீது ரயில்வே ஊழியர் கெடுபிடி

யாழ்ப்பாணம், மார்ச் 10

வவுனியா ரயில் நிலையத்தில், வட பகுதிப் பயணிகள் மீது ரயில்வே சிற்றூழியர்களின் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன என்று கூறப்படுகிறது.

வடக்கில் இருந்து வரும் பயணிகள் நீண்ட பயணத்தின் பின்னர் தாண்டிக்குளத்தில் படையினரின் பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பின்னர் படையினரின் "பாஸ்" பிரச்சினைகளையும் தாண்டி, கொழும்பு ரயிலை பிடிப்பதற்காக பயணிகள் வவுனியா ரயில் நிலையத்துக்கு விரையும்போது, அங்குள்ள தமிழர்களான சிற்றூழியர்கள் நடந்து கொள்ளும் விதம் பயணிகளுக்கு பெரும் சினமூட்டுவதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரயில் நிலையத்தில் படையினரின் பரிசோதனையின் பின்னர் சிற்றூழியர்களும் பயணிகளின் பொதிகளை துருவித் துருவி ஆராய்கின்றனராம்.

பயணிகளுக்கு சினமூட்டும் விதத்தில் கேள்விகளைக் கேட்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-17)

## வடக்கில் மலேரியா வாரம் 18 ஆம் திகதி முதல் 25 வரை

யாழ்ப்பாணம், மார்ச் 10 குடாநாட்டில் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை மலேரியா தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பொதுமக்கள் மத்தியில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவி வருவதை தொடர்ந்து அதற்கான தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் நோக்கிலும், மக்களிடையே மலேரியா நோய் தடுப்பு பற்றிய விழிப்புணர்வைத் தோற்றுவிக்கு முகமாகவும் மலேரியா வாரம் அனுஷ்டிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

மலேரியா தடுப்பு வாரத்தில் பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் பிரதேச செயலர்கள் தலைமையில் சிரமதான பணிகள் மேற்கொள்ளப்படும். கிராமம்தோறும் உள்ள சமய, சமூக நிறுவனங்களும் இந்த வேலைகளில் பங்கு கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதே வேளை நோய்த் தடுப்பு சுகாதார அறிவுரைகளும் மக்களுக்கு அளிக்கப்படும். [உ-5]

## ஜி. சீ. ஈ. உயர்தரம்:

# பழையபாடத் திட்டப்படி பரீட்சை எழுத 1997 வரை அவகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 10 கல்வி, உயர்கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு பாடத் திட்டங்களில் செய்துள்ள மாற்றம் 1994 செப்டம்பர் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருகிறது.

புதிய பாடத்திட்டத்தின் கீழான முதலாவது பரீட்சை 1996 ஆகஸ்ட் மாதம் நடைபெறும். பழைய பாடத்திட்டத்தின்படி பயின்று மீண்டும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் வசதிக்காக 1996ஆம், 1997ஆம் ஆண்டுகளில் பழைய பாடத்திட்டத்தின்படியும் பரீட்சை நடைபெறும்.

யாழ். கல்வித் திணைக்களம் 8-3-94ஆம் திகதி குறிப்பிட்டு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இப்புதிய பாடத்திட்டங்கள் 1994ஆம் ஆண்டில் ஆண்டு 12இலும்—

1995ஆம் ஆண்டில் ஆண்டு 13இலும்— பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வித் திணைக்களம் விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது!

★ தற்பொழுது நான்கு பாடங்களுக்குத் தோற்றும் ஜி. சீ. ஈ. உயர் வகுப்பு மாணவர்கள் மூன்று பாடங்களுக்குத் தோற்றுதல் வேண்டும்.

★ நான்காவது பாடமாக ஒரு பொது இணைந்த உட்கருப்பாடம் அறிமுகப்படுத்தப்படும். அனைத்துத் துறை மாணவர்களுக்கும் கட்டாய பாடமான இப்பாடம் தாய் மொழி, ஆங்கிலம், கலாசார பாரம்பரியம், பொது அறிவு என்பனவற்றைப் பாகங்களாகக் கொண்டிருக்கும்.

★ தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களுக்குப் பதிலாக உயிரியற்பாடம் அறிமுகப்படுத்தப்படும்.

★ பௌதீகத் துறையைச் சேராத மாணவர்களின் கணிதத் தேவையை ஈடுசெய்வதற்காக அவர்களுக்கான கணித பாடத்திற்கும், வர்த்தக மாணவர்களுக்கான வர்த்தக புள்ளிவிபரவியல் பாடத்திற்கும் பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இக்கணித பாடம் தூய கணிதம், பிரயோககணிதம் என்பனவற்றிற்கு மேலதிகமானதாகும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(பாடத்திட்ட மாற்றம் சம்பந்தமான இச்செய்தி 6-3-94 உதயன் முதலாம் பக்கத்தில் ஏற்கனவே பிரசுரமாகி இருந்தது) (இ)

## தற்போதுள்ள ஆங்கில ஆசிரியரின் மொழித்திறனை அதிகரிக்க முடிவு

கொழும்பு, மார்ச். 10 ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்களினதும் ஆங்கிலம் கற்ற அரசாங்க ஊழியர்களினதும் உதவியோடு தற்போதுள்ள ஆங்கில ஆசிரியர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்த தேசிய கல்வி ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.

தற்போது ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களில் அதிகமானோர் ஜி சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியை பெற்றவர்கள் என்றும் —

அவர்களது மொழி அறிவை மேம்படுத்துவது இந்த திட்டத்தின் குறிக்கோள் என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஆங்கில ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உள்ள பாடசாலைகளில் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியரை நியமிக்கவும்—

பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலஇலக்கியத்தை ஒரு பாடமாக கற்பிக்கவும்— மேலும் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் வக்ஸ்மன் ஜெயத்திலக தெரிவித்தார். [இ-162]

## இலவச கல்வித்திட்ட உதவி; அரசு ஒருபோதும் நிறுத்தாது

### அமைச்சர் லொக்குபண்டார கூறுகிறார்

இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் எந்த உதவியையும் அரசாங்கம் ஒருபோதும் நிறுத்தமாட்டாது.

இவ்வாறு கல்வி, கலாசார அமைச்சர் லொக்குபண்டார தெரிவித்தார்.

ஜனசக்தி பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கும் மற்றும் வறிய பிள்ளைகளுக்கும் மதிய உணவு முத்திரை வழங்கப்படும் என்றும்—

மதிய உணவு முத்திரைக்கான பெறுமதியை அதிகரிப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது என்றும்— அமைச்சர் தெரிவித்தார்.

மாணவர்களுக்கான சீருடைத்துணி ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என்றும் லொக்குபண்டார சொன்னார்.

இலவசக் கல்வித் திட்டத்தை அர்த்த முள்ளதாக்கும் வகையில் ஜனாதிபதி போதியளவு நிதியை வழங்கவிருக்கிறார் என்று குறிப்பிட்ட அமைச்சர், எந்தக் கட்டத்திலும் இலவச சீருடை, புத்தகங்கள், மதிய உணவு முத்திரை வழங்கல் நிறுத்தப்பட மாட்டாது என்றார். (ஒ-3)

## சிவராத்திரியை முன்னிட்டு நடத்திய நாவன்மைப் போட்டிகள் பரிசளிப்பு வைபவம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 10 சிவராத்திரியை முன்னிட்டு, இந்து சமயப்பேரவை, வலி—தெற்கு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்திய நாவன்மைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்கும் வைபவம் இன்று வியாழன் பிற்பகல் 5-00 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவிலில் நடைபெறும்.

மருதனார்மடப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. இரத்தினராசா பரிசில்களை வழங்குவார்.

பரிசு பெறுவோர் விவரம் வருமாறு:

கீழ்ப்பிரிவு 1. து. பாலகுமார் - இணுவில் இந்துக்கல்லூரி, க. கயல்விழி - ஏழாலை மகாவித்தியாலயம், 2. நி. பிரவீனா-சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை, 3. க. கஸ்தூரி - ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை.

மத்திய பிரிவு 1. ம. தாரணி - ஸ்கந்தவரோதயா, 2. யே. மோகனா - ஸ்கந்தவரோதயா, 3. க. பாலசுபேசன்-ஏழாலை மகாவித்தியாலயம்.

மேற்பிரிவு 1. ஏ. சிவராமி- இணுவில் இந்துக்கல்லூரி, 2. ப. ஜெயரூபா - ஏழாலை மகாவித்தியாலயம், 3. இ. துஷ்யா - ஏழாலை மகாவித்தியாலயம்.

அதிமேற்பிரிவு 1. ம. சத்தியவாணி - இராமநாதன் கல்லூரி, 2. ஏ. அனுகாந்தன் - ஸ்கந்தவரோதயா, 3. யோ. சிவயோகநாதன் - ஏழாலை மகாவித்தியாலயம். (இ)

# கம்பன் கவியை ஒருதரமேனும் படித்துச் சுவைக்க வேண்டும்

### கம்பன் விழாவில் புதுவை இரத்தினதுரை

வடமராட்சி, மார்ச் 10 "இந்த மண்ணில் தமிழனாக வாழ்பவன் ஒரு தடவையாவது கம்ப காவியத்தை படிக்க வேண்டும்; சுவைக்க வேண்டும். கம்பஇராமாயணத்தைதின் எப் பகுதியும் கற்கண்டு தான்"

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை வடமராட்சி கம்பன் விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியில் வாழ்த்துத் தெரிவித்துப் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றிலில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. புதுவை இரத்தினதுரை மேலும் பேசுகையில் கூறியதாவது:

"கம்பன் விழா ஏன் என்று கேட்பவர்களுக்குத் தான் இந்த விழா அவசியம். ஆட, பாட இந்த மண்ணில் எதிரியிடம் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை. இன்று ஆயிரக்கணக்கில் விழாக்களுக்கு மக்கள் கூடுவதும் ஒரு போராட்டம்தான் நாம் விழுந்தும் எழுவோம் என்பதை இது போன்ற விழாக்களுக்கு அணிதிரள்வதன் மூலம் எதிரிக்கு நாம் எடுத்துச் சொல்வோம்.

இந்த மண் நாளை விடுவிக்கப்படும். இதற்கான காலஎல்லையை கணக்கிட்டுச் சொல்ல முடியாது விடுதலைக்காக போராடும் இயக்கங்கள் எதுவும் கால எல்லை நிர்ணயித்து போராட்டம் நடத்துவதில்லை. வியட்நாம், கியூபா, சீனா போன்ற நாடுகள் திகதி குறித்து விடுதலைப் போராட்டத்தை நடத்தவில்லை.

கம்பன் கழகத்தில் அறிஞர்கள், கலைஞர்கள் கூடுகிறார்கள். அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். இது பாராட்டுக்குரியது. இதை விட்டு ஏன் பயப்படவேண்டும்? கலைஞர்கள், அறிஞர்களுக்கு கழகம் விருதுகளை வழங்குவதையிட்டு நாம் மண் சார்பாக மகிழ்ச்சியடைகிறேன் என்றார்.

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை தொடக்கவுரை நிகழ்த்தினார். கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் நிறைவுரை நிகழ்த்தினார். இவ் விழாவில் மங்கள இசை வழங்கிய திரு. என். ஆர். கே. இரத்தினகுமார், என். ஆர். கே. வாகீஸ்வரன் குழுவினருக்கு கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (க-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**மலிவு விற்பனை**

ஆண்டு 5 புலமைப் பரிசில் O/L, A/L மற்றும் சகல ஆண்டுக்கான அனைத்து பாடங்களுக்குமுரிய பயிற்சி வினாத்தாள்கள் 50% தள்ளுபடி விலையில் 9-3-94 முதல் 31-3-94 வரை (Clearance Sale) விற்கப்படும். Bond. யாழ்ப்பாணம். (29807)

**கோழிக்குஞ்சு விற்பனை**

Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் உடல்பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [29823]

கைலைன் பிறவுண் Hy Line Brown பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29810)

**பஞ்சாங்கக் கையேடு**

சுபநேர, சுபகரும, நாள் கோள், நற்பலன்கள் ஜனவரி 94 முதல் டிசம்பர் வரை வீரகேசரிவார ஜோதிட ஆய்வாளர் எஸ். தெய்வநாயகம் B. A. விற்பனை யாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை. (கி-7297)

---

யாழ்.
பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு

இரண்டாம் வருட மாணவர்களுக்கான 7ஆம் தவணைப்பணமும், ஏனைய வருட மாணவர்களுக்கான 2ஆம் தவணை பணமும் 09-03-1994 முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீனசந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகைகளில் இடப்பட்டுள்ளன.

- பதிவாளர்.

[சி-7523]

---

## BECON

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அளவையியல்: —
S. S மனோகரன்

மீட்டல் வகுப்பு

ஆரம்பம்:
12 — 03 — 1994
சனி காலை 8-00மணி

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-7535)

---

தென்மராட்சியில்......

## பிறிலியன் கல்வி நிலையம்

சங்கத்தானை,
சாவகச்சேரி

1994 பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான O/L பகல் நேர வகுப்புக்கள் ஆரம்பம்:
ஞாயிறு காலை 9.00மணி
வழமையான ஆசிரியர் குழுவினால்

(7110)

---

யாழ். வண்ணை

## நாவலர் மகா வித்தியாலயம்

யாழ்ப்பாணம்,

### பழைய மாணவர் சங்கம்

பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் 13-03-1994 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-00 மணிக்குப் பாடசாலை நாவல மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. சகல பழைய மாணவர்களும் கூட்டத்திற்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

அதிபர்.

(29826)

---

## ஆனந்தாஸ் சீயாக்காய் பவுடர்

### சித்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப் பெற்றது

கருத்துக்கணிப்பில் முதல் பரிசு பெற்ற கருத்து

பவுடராகவோ, சொறுசொறுப்பாகவோ அல்லது கட்டியாகவோ (நாட்கள் சென்று) இருந்தாலும் சுடுதண்ணீரில் போடும் போது அவிந்து "சம்போ" போன்று செயல்படுகிறது.

தலையில் உள்ள அழுக்கை அகற்றி கண்ணுக்கு குளிர்ச்சியைத் தருகிறது!

சித்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்படுவதால் பல மூலிகைகளின் பயனை நாம் பெறுகிறோம்.

பரிசு பெறுபவர்,
சி. குசந்தன்.
மீசாலை வடக்கு, மீசாலை.

[7116]

---

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 24 | 10 |
| 10 | 03 |
| 1918 | 1982 |

### வல்லிபுரம் பொன்னுத்துரை

(புகையிரத நிலைய இளைப்பாறிய அதிபர், மயிலிட்டி வடக்கு - மயிலிட்டி)

எம்மையெல்லாம் சீராக வளர்த்து
ஆளாக்கிய தெய்வமே !- நீங்கள்
மறைந்து ஆண்டுகள் பன்னிரண்டு ஆகிவிட்டன
உங்கள் ஆசீர்வாதம் என்றும்
எம்மோடு இருக்க வேண்டும்;

ஆத்மசாந்தி வேண்டி நிற்கும்;
மனைவி, மக்கள,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மயிலிட்டி வடக்கு,
மயிலிட்டி.

(29749)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 18 | 08 |
| 03 | 02 |
| 1937 | 1994 |

### திருமதி பரமேஸ்வரி துரைராசா

அற்றைத் திங்கள் எங்கள்
அன்புடையாளும் இருந்தாள்
இற்றைத் திங்கள் எம்மைப் பிரிந்து
இறைவனடி சேர்ந்தாள்!

இன்றுடன் முப்பத்தியொரு நாட்கள் முடிவடையும் நிலையில் எம் இனியவளின் பிரிவால் துயருறுகிறோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(29825)

---

# கிராமசேவையாளர்களின் தளபாட பிரச்சினை தீரும்

வலிகாமம் மேற்கு மார்ச் 10

கிராம உத்தியோகத்தர்களுக்கு மேசை, கதிரை அலுவலக கைப்பை கொடி ஆகியன வழங்கப்படவுள்ளன.

இவற்றுள் தளபாடங்களுக்கான நிதி பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதுமுள்ள கிராம உத்தியோகத்தர் அலுவலக தளபாடங்கள் இல்லாது கடமையாற்றுவதை தொழிற் சங்கங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கும் சுட்டிக் காட்டி இருந்தன

இதனை அடுத்து நாடு முழுவதும் கடமையாற்றும் சுமார் 14,750 கிராம உத்தியோகத்தர்களுக்கும் அலுவலக தளபாடங்கள் வாங்க தலா ரூபா 5ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திறைசேரி _ னது நிதியில் அலுவலக பையையும், தேசியக் கொடியையும் வழங்குவதற்கு நிதி வழங்கவுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 435 கிராம உத்தியோகத்தர்களும் இதனால் நன்மை அடைய உள்ளனர்.

தமிழ் பேசும் கிராமசேவை அலுவலர் சங்கம் இது தொடர்பாக பல தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-175)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 10

வட்டுக்கோட்டை தொலைக் கல்வி நிலைய இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வுகள் எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (இ)

---

## சன்மார்க்க சபை - குரும்பசிட்டி

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான ஆதரவில் நடத்தும்

### சைவ சமயப் பெருவிழா

மணிவிழா நிகழ்ச்சித் தொடர் - 04

இடம்: யா/இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம்.

காலம்: எதிர்வரும் ஞாயிறு, திங்கள்
(13 ஆம், 14 ஆம் திகதி)
காலை 8-00 மணி — 1-00 மணி வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏ. ரீ. பொன்னுத்துரை,
வைத்திய கலாநிதி எஸ். பிரபாகரன்,
இணைச் செயலாளர்கள்;

மணிவிழாச் சபை,
சன்மார்க்க சபை,
குரும்பசிட்டி.

(29829)

---

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

### ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுச்கூட்டம் 1994-04-10ஆம் நாள் நடைபெறும்.

அங்கத்தவர்களைத் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

பொதுக்கூட்டத்தில் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள், அவற்றை இம்மாத இறுதிக்குள் எனக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

சோ. பத்மநாதன்,
செயலாளர்.

கலாசாலை வீதி.
திருநெல்வேலி.

(29828)

---

## கலை ஊடக இணையத்தின் முக்கிய அறிவித்தல்

இரவு 10-00 மணிக்கு மேல் வீடியோ படம் காண்பிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பது தெரிந்ததே, சிவராத்திரியை முன்னிட்டு இன்றைய தினம் மட்டும் (10-03-94) விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தின் தணிக்கை சபையினரால் இத்தடை தளர்த்தப்பட்டுள்ளது என்பதை தெரியப் படுத்துகின்றோம்.

-கலை ஊடக இணையம்.

(சி/7525)

---

யாழ். வண்ணை ஸ்ரீ விசுவலிங்க
மகா கணபதி கோயில்
(பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில்)

## மகா சிவராத்திரி விழா நிகழ்ச்சிகள்

மாலை: 6-30 — 10-00 மணி:
சமய சொற்பொழிவுகள்

இரவு: 10.15 — 11.45 மணி
பட்டிமன்றம்

விடயம்: இந்து சமயத்தின் அடிப்படை
தத்துவமே/ ஆசாரமே/ சடங்கே.
(பிரபல ஆசிரியர்கள் பங்கு பற்றுவர்)

நள்ளிரவு: 12-30 — 2 00 மணி:
சங்கீதக் கச்சேரி

அதிகாலை: 2-30 — 4-00 மணி:
இன்னிசைக் கச்சேரி

நான்கு சாமப் பூசைகளும் நடைபெறும்.

-தர்மகர்த்தா சபை.

(29830)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா அருளம்பலம்

முன்னாள் தெகிவளை பிரபல வர்த்தகர் அமரர் அருளம்பலத்தின் அன்பு மனைவி திருமதி இராசம்மா நேற்று (9 - 3 - 94) பண்ணாகத்தில் அவரது இல்லத்தில் இறைபதம் அடைந்துவிட்டார். இவர் சிவசுப்பிரமணியம் (மயூரன் ஸ்ரோர்ஸ் வழுக்கம்பறை), சிங்கப்பூர் அமரர் அற்புதமணி மகேசன், (ஐக்கிய ராச்சியம்) சந்திரவதனா சண்முகராஜா (B. A), பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கம்மா, சிங்கப்பூர் மகேசன் (ஐக்கிய ராச்சியம்), சண்முகராஜா, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியும், சிறிமயூரன், தயாளினி, சிவதாஸ், சிவராஜ், சிவநேசன், மங்களகௌரி, பிரசன்னா, கல்பனா, அருள்வேந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

தகனக்கிரியை இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவசுப்பிரமணியம்
(மகன்)

பண்ணாகம்:
(29836)

---

கலாநிதி

## திருமதி சுலோசனா மகேந்திரன்

(சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம்)

கலாநிதி ம. சுலோசனா அவர்கள் 7 - 3 - 94 அன்று காலமானார். இவர் சோ. மகேந்திரனின் (பொறியியலாளர், மின்சார சபை, கொழும்பு) அன்பு மனைவியும், தர்சனி, கௌதமி ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. செ. சிவரட்ணம், அன்னபூரணம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், சோமசுந்தரம் செல்வநாயகி அவர்களின் மருமகளும், திருமதி ம. லலிதாவின் (ஆசிரியை விக்டோரியா கல்லூரி) அன்புச் சகோதரியும், செ. மகேஸ்வரனின் (மனோ, சிராம்பியடி லேன் யாழ்ப்பாணம்) மைத்துனியுமாவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் சங்கானை இல்லத்தில் இன்று (10 - 3 - 94) நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு சராசி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செ சிவரட்ணம்
(தகப்பன்)
செ. மகேஸ்வரன்
(மனோ - மைத்துனர்)

தேவாலய வீதி,
சங்கானை. (29838)

---

## திருமதி கனகரத்தினம் இரத்தினம்

கொக்குவிலைச் சேர்ந்தவரும், சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி கனகரத்தினம், இரத்தினம் 09-03-1994 (புதன்கிழமை) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் திரு. க. அரசரட்ணம் (சேவையர்) திருமதி த. மல்லிகாதேவி (ஆசிரியை டிறிபேக்கல்லூரி சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு தாயாரும் ஆவார்.

ஈமைக்கிரியை நேற்று 09-03-94 (புதன் கிழமை) மாலை 5மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி மயானத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
-குடும்பத்தினர்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. (7119)

---

## திரு. சீவரத்தினம்

(முன்னாள் கமநலசேவைத்துறை உதவி அரச அதிபர்)

திரு. சீவரத்தினம் வவுனியாவில் காலமானார். அன்னாரது நல்லடக்கம் 09 - 03 - 1994 புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்றது என்பதை அறியத் தருகிறேன்.

தகவல்:
N. யோசவ் ஆசீர்வாதம்,
(மைத்துனர்)

கண்டிக்குளி. (19827)

---

திருமதி

## றோகிணியம்மாள் இரத்தினவேல்

(இளைப்பாறிய யாழ். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி கனிஷ்ட பிரிவு அதிபரும், உதவி மாவட்ட ஆணையாளரும், [குருணையர்])

பன்னாலை, தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி றோகிணியம்மாள் இரத்தினவேல் இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. கந்தையா இரத்தினவேல் (சுழிபுரம்- இளைப்பாறிய பிரதம எழுது வினைஞர் யாழ். செயலகம்), அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சி தம்பு அன்னலட்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், DR இராஜகௌரி [ஆஸ்திரேலியா], இராஜவேல் [லண்டன்] இராஜ யோகன் [இந்தியா], ஆகியோரின் அன்புத்தாயாரும், சின்னப்பு பஞ்சலிங்கம் [பட்டயக் கணக்காளர் ஆஸ்திரேலியா], அவர்களின், மாமியாரும், சுழிபுரம் நடராசா நாகம்மா [இளைப்பாறிய ஆசிரியை], கந்தசாமி செல்லம்மா [இளைப்பாறிய ஆசிரியை], ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற வைத்தீஸ்வரன் கனகம்மாவின் சகோதரியும், ரஞ்சன் [கனடா], குணாளன் [கிராம சேவை அலுவலர் சித்தங்கேணி], தயாளன் (லண்டன்] ப. வை ஜெயபாலன் [கிளிநொச்சி] ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திருவான் மியூரில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
வ. குணாளன்

தேவாலய ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [7122]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 592/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10-03-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

---

## அரை இறுதி ஆட்டம்

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர்நிர்மாண நிதிக்காக பாடும்மீன் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள்.

**10 — 03 — 1994** வியாழக்கிழமை

3 - 00 மணி ஞானமுருகன் எதிர் யங்ஹென்றின்
4 - 00 மணி பாடும்மீன் எதிர் சென் அன்ரனீஸ்

பாசையூர் அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும்

விளம்பர அன்பளிப்பு — றொ. தர்மா
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்,
செம்மா தெரு, யாழ்ப்பாணம்.

---

## எமது புதிய ஓடியோ டிஸ்க் வெளியீடுகள்

- மாறுவேடம்
- என் இனிய பொன்நிலாவே
- ஐ லவ் யூ
- தமிழ் றெப் பாடல்கள்
- பலே பாலசந்திரா
- காவல் பறவைகள்
- இசை அமுதம்
- ரோக் ஷோக்

* T. M. சௌந்தர்ராஜன், P. சுசீலாவின் பழைய பாடல்கள். இப்பாடல்களை காதுக்கு இனிய கானங்களாக பதிந்திட

**சுப்பஸோ வீடியோ, ஓடியோ சென்ரர்**

198/5 நாவலர் றோட், யாழ்ப்பாணம். (பி-7531)

---

JAFFNA COLLEGE CEYLON

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு

பின்வரும் வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. எல்லா வகுப்புகளிலும் இடங்கள் உண்டு. விருப்பமானவர்கள் உடனே விண்ணப்பிக்கவும்.

(1) அடிப்படை ஆங்கிலம் (Basic English)
(2) 1994 / 1995 கல்வியாண்டு பேராதனை பல்கலைக்கழக G. S. Q (Maths) விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
(3) 1994/1995 கல்வியாண்டு பேராதனை பல்கலைக்கழக G. S. Q (Biology) உயிரியல் விஞ்ஞானம் விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
(4) B. A II (Jaffna)
1) ஆங்கில இலக்கியம், 2) அரசறிவியல், 3) மெய்யியல், 4) இந்துநாகரிகம் ஆரம்பமாகி விட்டன.

விபரங்களுக்கு:

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப்பிரிவு**
இல: 464, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம். (7527)

---

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் வ. பொன்னம்பலம் (V.P.)**

முன்னாள் தலைவர்
யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

எமது சமாச முன்னாள் தலைவர் அமரர் வ. பொன்னம்பலம் அவர்கள் கனடாவில் காலமாகி விட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரின் அளப்பரிய சமூகப்பணிகளை நினைவு கூர்ந்தும் நிற்கிறோம்.

யா. மா. சி. க. கூ. ச. சமாசம்

182½, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

## இன்று

கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் தலைமையில் நடைபெறும். (த-89)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 9 பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரனின் "மூலவேர்" நூல் அறிமுக விழா இன்று வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் 238, பிரதான வீதியில் உள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறும்.

பேராசிரியர் நீ. மரியசேவியர் தலைமை அறிமுக வுரையை நிகழ்த்துவார். அதைத் தொடர்ந்து "புதுப் புனல்" நாடகம் இடம் பெறும். (க-161)

## ஆலயங்களில்

கன்னாகம் அருள் மிகு வீரபத்திரர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் சங்காபிஷேகமும் அன்னதானமும்இடம்பெறும். (த-89)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டிகளில் இவ்வார இறுதியில் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:

★ பருத்தித்துறை ஹாட்லி எதிர் மானிப்பாய் இந்து — ஹாட்லி மைதானத்தில் இன்று காலை 8-30 மணி முதல்.

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி — மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை பிற்பகல் 2-30 மணி முதல் நாளை மறுதினம் காலை 9 மணி முதல்

★ சென் ஜோன்ஸ் எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி — சென். ஜோன்ஸ் மைதானத்தில் நாளை பிற்பகல் 2-30 மணி முதல் நாளை மறுதினம் காலை9 மணி முதல்.

★ கன்னாகம் ஸ்கந்தவரோதயா எதிர் ஹாட்லி — ஸ்கந்தா மைதானம் நாளை மறுதினம் காலை 8-30 மணி முதல்

★ ★ ★

யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் யாழ். பல்கலைக்கழக அணிக்கும் இடையிலான — 50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட — கிரிக்கெட் போட்டி இன்று காலை 9-30 மணி முதல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் அராலி இந்து சுதா விளையாட்டரங்கில் நடத்திவரும் — வலி. மேற்கு வலய உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு;

★ 3-30 மணி:— வட்டு. சிவன் வி. க. அணி எதிர் ஸ்கந்தா இ. வி. க. அணி.

★ 4 30 மணி: — ஞானமுருகன் வி. க. அணி எதிர் ஏ. எல். வி. க, அணி.

(உ-20)

★ ★ ★

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர்நிர்மாண நிதிக்காக பாடும்மீன் வி. க. நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் பாசையூர் அன்ரனீஸ் மைதானத்தில் இன்று வியாழன் பிற்பகல் 3 மணி முதல் நடைபெறும்.

முதலாவது ஆட்டத்தில் ஞானமுருகன் கழகமும் யங்ஹென்றீஸ் கழகமும், இரண்டாவது ஆட்டத்தில் பாடும்மீன் கழகமும் சென் அன்ரனீஸ் கழகமும் மோதும். (உ)

---

**SPOKEN ENGLISH BY BRITTO**

ஆரம்பம் **12-3-94**
(1 மணி)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ். (பி-7440)

---

புலோலி பசுபதீஸ்வரர் ஆலயம்
(சிவன் கோவில் பருத்தித்துறை)

## மகா சிவராத்திரி விழா

இன்று நான்குசாமப் பூசைகளும், விசேட அபிஷேகங்களும் இடம்பெறும்.

நள்ளிரவு 12. 30 மணிக்கு
சிறப்பு நிகழ்ச்சி
"பற்றிய கொள்கைக்கய்ப சம் துறப்பதில் முன்னின்றவர்"

மனுநீதிச் சோழனே! சிறுத்தொண்டரே!

திரு இரா செல்வவடிவேல் — திரு ஆ.ர. திருமுருகன்
திரு க குமாரதாசன் — திரு. நி சிவசங்கர்
திரு. ச. மணிமாறன் — திரு. ஸ்ரீபிரசாந்தன்

நடுவர்
திரு, இ. ஜெயராஜ்

நிகழ்ச்சி ஏற்பாடு: செ. ஜெகசோதி
(29842) ஸ்ரீஸ்கந்த விலாஸ், பருத்தித்துறை.

---

## யாழ். ஸ்ரீதர் திரையில்

**மகா சிவராத்திரியை முன்னிட்டு**
(இன்று மட்டும்)

சிவாஜி, சாவித்திரி நடித்த

**திருவிளையாடல்**
(கலர்)

காட்சி நேரங்கள்: பி.ப. 3-00 மணி
மாலை 6-00 மணி
இரவு 9-30 மணி
நள்ளிரவு 12-30 மணி

**வெள்ளி முதல்**

ரஜனி நடித்த

**BLOOD STONE**
(கலர்)

இத்துடன் ஜனவரி 94

**ஒளி வீச்சு**

(கேளன் இட்டு உட்பட 10 வேங்கைகளின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள்)

| | | |
|---|---|---|
| தினசரி | பிற்பகல் | 3-00 மணி |
| | மாலை | 6-00 மணி |
| சனி, ஞாயிறு | காலை | 10 30 மணி |
| | பிற்பகல் | 3-00 மணி |
| | மாலை | 6-00 மணி |

(29843)

---

# முக்கிய அறிவித்தல்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சாவகச்சேரிப் பிரிவு

பொதுக்கூட்டம்/
புதிய நிர்வாகக் குழுத் தெரிவு

காலம்:- 27 - 03 - 1994 ஞாயிறு காலை 10 மணி
இடம்:- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபம்

எமது பிரிவின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் மேற்படி திகதியில் நடைபெறும்.

கௌரவ நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பதவிக்கும், தேர்தலில் வாக்களிக்கவும் 12 - 02 - 1994இற்கு முன், 1994 ஆம் ஆண்டிற்குரிய அங்கத்துவப் பணம் செலுத்தியோர் தகைமையுடையோராவர்.

06 - 03 - 1994 இல் இருந்து 12 - 03 - 1994 வரை தேர்தலுக்கான வேட்பு மனுப்பத்திரம் விநியோகிக்கப்படும். வேட்புமனுப் பத்திரம் விலை ரூபா10/-

13 - 03 - 1994 இல் பூர்த்தி செய்யப்பட்ட வேட்பு மனுப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

15 - 03 - 1994 இல் விரும்புவோர் தங்கள் வேட்பு மனு விண்ணப்பத்தை வாபஸ் பெற முடியும்.

கௌரவ நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கவனத்திற்கெடுத்து செயற்படவும்.

சகல அங்கத்தவர்களும் 27 - 03 - 1994இல் நடைபெற இருக்கும் பொதுக் கூட்டத்தில் தவறாது கலந்து தங்களின் முக்கிய பங்களிப்பைச் செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

செஞ்சிலுவைச் சங்க சேவையிலுள்ள
வீ, பி, தியாகராஜா
கௌரவ செயலாளர்

சாவகச்சேரிப் பிரிவு. (29835)

---

# மரண அறிவித்தல்

## மருதடியார் அன்னம்மா

(நயினாதீவு)

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். மாட்டின் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான மருதடியார் அன்னம்மா காலமானார்.

அன்னார் மருதடியாரின் அன்பு மனைவியும், கனகரட்ணம் (கொழும்பு), கனகலெட்சுமி (நயினாதீவு), தனலட்சுமி, தனபாக்கியலட்சுமி, யோகலட்சுமி, யோகரத்தினம், அன்னபாக்கியலட்சுமி, கணேசரத்தினம், ஆகியோரின் தாயாரும், இராசலட்சுமி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், மகாதேவா, செல்வலிங்கம், பத்மநாதன், திருமதி யோகரட்ணம், யோசப், திருமதி கணேசரத்தினம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 9 - 3 - 94 புதன் கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சுந்தரலிங்கம் கனகலட்சுமி

நயினாதீவு 7. (7124)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org